**பிறந்தநாள் வாழ்த்து!** *09-02-2022*

கனவை நிறைக்கும் அற்புத நிலையாய்,
மனத்தை ஆளும் மங்கலச் செல்வி!
தனமாய் அன்பில் தோய்ந்திடும் வடிவு!
சினமே இல்லாச் சிந்தையைத் தருவாள்!

குணமாய் என்னிடம் கேள்விகள் கேட்டு,
அணைவாய் நின்று அகமும் மகிழ்வாள்!
மனையில் எங்கள் மார்கழித் திங்கள்!
அனைவரின் நெஞ்சிலும் ஆட்சி கொள்வாள்!

அன்னலாம் கண்ணனை அவளுக்கும் பிடிக்கும்!
சின்னதாய்ப் பேசிச் சிரித்தும் மகிழ்வாள்!
என்னையும் அழைத்து எத்துனைக் கேள்விகள்?
தென்னைக்கு ஓலையது வாழைக்கு இலையாமோ!

திண்ணமாய் பலகேள்வி நாளும் கேட்டென்னை,
வண்ணமாய்ச் சிந்திக்க வகைசெய்யும் பெயர்த்தி!
எண்ணத்தில் என்நாளும் என்னுடனே நடைபயில,
கன்னத்தில் சிரிப்பெழுதும் எந்தையின் சாயலொடு!

சின்ன மகளுக்கு சிந்திக்கும் செல்விக்கு
வண்ணமாய் வந்தது பிறந்த நாளின்று!
எண்ணத்தில் அவளென்று இதயம் சொன்னாளும்,
கன்னித் தமிழிலும் வாழ்த்து கண்டேனே!

நன்னிய சீர்பலவும் நானிலத்தில் அவள்கொண்டு,
மன்னிய அறங்களோடு மருவிலா வாழ்வு கொண்டு,
எந்நாளும் வாழ்ந்திடுக பெயர்த்தி **யாழினியே!**
கண்ணன் அருள் எந்நாளும் உனக்குண்டு !

அன்புடன்,

***ஆத்தா, தாத்தா, சித்தப்பாவுடன்,***
***கொள்ளாத்தா!**** *08-02-2022 (06.35 PM)*

ஆதிக்குப் பிறந்தநாள் இன்று! அருந்தவத்தால்,
சாதிக்கும் அருளோடு பிறந்தமகன், ருத்ரா
மேதினியில் முன்னவனாய் முன்நின்று
முதன் முதலில் சீராட்டும் நன்நாள்!
எல்லா வளமும் நலனும் பெற்று,
எந்நாளும் வாழ்க இனிது! 09-02-2022
**இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!**

**குருபிரசாத் இராதாகிருஷ்ணன்** 10-02-2022

அன்பின் வழியாய் ஆன்றநிலையாய்,
இன்பம் யாவும் ஈடில்லாது எய்தி,
உறவும் மகிழ ஊரும் போற்ற,
எந்நாளும் வாழ்கவென ஏந்திய அன்பில்,
ஐயனாம் இறைவன் அருளை வேண்டி,
ஒப்பிலா புகழுடன் ஓங்கி வாழ்கவென வாழ்த்தும்,

அத்தை & சித்தப்பா

**இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!**

**பிறந்தநாள் வாழ்த்து!** 11-02-2022

தங்குதடை யில்லா தமிழ்மணம் போல்,
பொங்கும் கடலிடை பொலியும் கதிராய்,
மங்காச் சிறப்புடனே மனிதகுல விளக்காய்,
சிங்கமகன் **தருண்கிருஷ்ணா** எந்நாளும்
வாழியவே! **இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!**